3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) 16-9-2020 அன்று துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யவிருக்கும் நிலையில், கொரோனா பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் குறித்து இன்று (15–9–2020) நிதியமைச்சர் தெரிவித்தல் குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொரோனா குறித்த நிதியொதுக்கீடு குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து, அவை உரிமை மீறலாக வரும் என மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கருத்து தெரிவித்தார். ஏற்கெனவே நிதியொதுக்கம் செய்து, அரசாணை வெளியிடப்பட்ட விவரங்களை மட்டும்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அது அவை உரிமை மீறலாகாது எனத் தீர்ப்பளிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16–9–2020) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2020)

2. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2020)

3. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை நிறுவன அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2020)